வியாபாரத்திற்கான அறிவுசார் சொத்து தொடர்

இல 2









# பார்வைக்கு நேர்த்தியான

## சிறிய மற்றும் நடுத்தர தாபனங்களுக்கான கைத்தொழில் வடிவமைப்பு பற்றிய அறிமுகம்

WIPO
WORLD
INTELLECTUAL PROPERTY
ORGANIZATION

# முகவுரை

வியாபாரத்திற்கான அறிவுசார் சொத்துரிமை தொடரில் இது இரண்டாவது வழிகாட்டியா கும். சந்தையில் ஒரு பொருளின் வெற்றிக்கு அதன் வடிவமைப்பு பிரதான காரணி என்பதனை இவ்வழிகாட்டி எடுத்தியம்புகின்றது.

கைத்தொழில் வடிவமைப்புச் சட்டத்தின் படி கைத்தொழில் வடிவமைப்பு என்பது அப்பொருளின் அழகியல் அல்லது வெளித் தோற்றத்தினையே குறிக்கின்றது. இது ஒரு பொருளுக்கு மெருகூட்டுவதுடன் வாடிக்கையாளரை வசீகரித்து ஒரு பொருளினின்று மற்றையதை தெரிவதற்கு ஏற்ற பிரதான காரணியாகவும் அமைகின்றது. ஒரு தாப னம் மற்றைய தாபன உற்பத்தியினின்று தமது உற்பத்திப் பொருளை வேறுபடுத்தி அவற்றுக்கான பிரதிமையை ஏற்படுத்தவும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் உதவு கின்றன. எனவே தான் தமது வடிவமைப் புக்களை முறைப்படி பாதுகாத்தல் அவசியமாகும்.

இவ்வழிகாட்டி சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளருக்கு (SMEs) கைத்தொழில் வடிவமைப்பு பாதுகாப்பு பற்றிய ஒரு அறிமுகமாகும். இவ் வழிகாட்டியில் இப்பாதுகாப்பு தொடர்பில் வினா விடை மூலமும், உதாரணங்கள் மூலமும் விளக்க படத்துடனும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பொது தாபனங்களின் அனுசரனையுடன் உள்;ர் தாபனங்களின் உதவியோடு ருஜீழு விடம் ஒரு பிரதியை பெற்று இவ்வழிகாட்டியை விருத்திசெய்து தேசிய ரீதியல் பரசுரிக்கமுடியும்.

## ”வியாபாரத்திற்கான நுண்ணறிவாளர் உடைமை” பிரசுரங்களின் தொடர்:

1. **இலக்கினை ஏற்படுத்தல்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில் முயற்சிகளுக்கான வியாபாரச் சின்னத்தின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல: 900.

2. **பார்வைக்கு நேர்த்தியான:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளுக்கான கைத்தொழில் வடிவமைப்பின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல: 498.

3. **எதிர்காலத்தின் உருவாக்கம்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளுக்கான காப்புரிமைகளின் அறிமுகம். உ.நு.உ.ஒ பிரசுர இல: 917.

4. **ஆக்கத்திறன் தோற்றம்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளுக்கான பதிப்புரிமையின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல: 918 (எதிர்பார்க்கப்படுகின்றது)

உ.நு.உ.ஒ. (WIPO) மின் புத்தகசாலையில (e-bookshop) www.wipo.int/ebookshop இல் சகல பிரசுரங்களும் கிடைக்கும்.

**கோரிக்கை கைவிடல்:** இவ்வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல், தொழில்சார் சட்ட மதியுரைக்கு பதிலீடாகாது. இதன் பிரதான நோக்கமானது இவ்விடய அடிப்படை தகவலை அளிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நுண்ணறிவாளர் உடைமை ஒன்றியத்தின் (உ.நு.உ.ஒ) முன்பு தெளிவாய் குறிப்பிட்ட அனுமதியுடன் இந்த பிரசுரமானது மொழி பெயர்க்கப்பட்டு மீள் அளிக்கப்பட்டுகின்றது, பதிப்புரிமை உரிமையாளரின் மூல ஆங்கில கூற்றானது www.wipo.int/sme/en/documents/guides/ இல் உள்ளது. எனவே, உ.நு,உ.ஒ. ஆனது, மொழிபெயர்க்கப்பட்ட கூற்றின் பிரசுரத்தின் செம்மை அல்லது திருத்தத்தன்மைக்கும் பொறுப்பாளியோ அல்லது கடமைப்பட்டவராக இருக்கமாட்டாது, ஏனெனில் பொறுப்போ அல்லது கடமையோ இலங்கை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்களிலேயே (செயல்திட்ட சி.ந.தொ.(மு.அ.) முழுமையாக தங்கியிருப்பதினாலாகும்.

”சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்கள் (செயல்திட்ட சி.ந.தொ.(மு.அ.) (பதிப்புரிமை 2010)” உ.நு,உ.ஒ. ஆனது (2006) மூல ஆங்கில மொழி கூற்றின் பதிப்புரிமைக்கு உரிமையாளியாக உள்ளது. இப்பிரசுரத்தின் எப்பகுதியினையாகிலும் எவ் வடிவிலும் அல்லது எவ்விதத்திலும், பதிப்புரிமை உரிமையாளரின் எழுத்துமூல அனுமதியின்றி மின்னணு மூலமோ அல்லது பொறிவழி மூலமோ மீள் அளித்தலோ அல்லது பரப்புதலோ சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவாறாக அன்றி ஆகாது.

பதிப்புரை உரிமையாளரிடமிருந்து எழுத்துமூல அனுமதியின்றி, இப்பிரசுரத்தின் எப்பகுதியையும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறன்றி மின்னணு சார்பாகவோ அல்லது பொறிமுறையாகவோ அல்லது எவ்வகையாகவோ அல்லது எவ்வடிவமாகவோ பதிப்புரிமையாளரின் எழுத்துமூல அனுமதியின்றி மீள் தயாரித்தல் ஆகாது.

www.wipo.int/sme/

# பொருளடக்கம்


பக்கம்

1. கைத்தொழில் வடிவமைப்பு 3

2. கைத்தொழில் வடிவமைப்பை பாதுகாத்தல் 6

3. வெளிநாடுகளில் வடிவமைப்பை பாதுகாத்தல் 16

4. கைத்தொழில் வடிவமைப் புக்களை அமுல்படுத்துதல் 18

5. கைத்தொழில் வடிவமைப்புக்களை பாதுகாப்பதற்கான மற்றைய சட்ட கருவிகள் 19


www.wipo.int/sme/

# 1. கைத்தொழில் வடிவமைப்பு

## கைத்தொழில் வடிவமைப்பென்றால் என்ன?

பொது வழக்கில் கைத்தொழில் வடிவ மைப்பு என்ற பதம் ஒருபொருளின் முழுமையான வடிவமைப்பும் செயல்திற னையும் குறிக்கின்றது. கையுள்ள ஒரு நாற்காலியை டுத்துக்கொண்டால் அதில் அமர்வது சௌகரிகமாகவும் பார்வைக்கு அழகாகவும் இருக்க வேண்டும். வியாபா ரத்திற்கான வடிவமைப்பென்னும் பொழுது ஒரு பொருளின் தொழில் திறமையை விருத்தி செய்வதும் அதன் கலைதிறனை யும் கணக்கில் எடுப்பதோடு அப்பொரு ளின் சந்தைப்படுத்தல், உற்பத்திச் செலவு மற்றும் இலகுவாக எடுத்து செல்லல், களஞ்சியப் படுத்துதல் திருத்துதல் மற்றும் விற்பனை போன்ற காரணிகளையும் கணக்கிலெடுக்கும்.

எவ்வாறாயினும் அறிவுசார் சொத்துச் சட்டப்படி கைத்தொழில் வடிவமைப்பா னது அப்பொருளின் கலைநுட்ப அல்லது அதனது அலங்கார தன்மையினையே குறிக்கின்றது. வேறுவிதத்தில் சொல்வதா னால் கையுள்ள நாற்காலியின் தோற்றத் தையே குறிக்கின்றது. ஒரு பொருளின் வடிவமைப்பில் தொழில் நுணுக்க அல்லது பிரயோக அம்சங்கள் இருப்பி னும், அறிவாற்றல் சார்ந்த சொத்து சட்டப்படி கைத்தொழில் வடிவமைப் பானது முழுமைபெற்ற அப்பொருளின் உருவஅழகில் தங்கியுள்ளதே அன்றி தொழில்நுட்ப அல்லது அதன் தொழிற் பாட்டிலல்ல.

கைத்தொழில் வடிவமைப்பு பலதரப்பட்ட கைத்தொழில் உற்பத்தி பொருட்களு னும், மோஸ்தர மற்றும் கைப்பணிப் பொருட்களான கடிகாரங்கள், ஆபாரணங் கள்,மற்றும் சொகுசுப்பொருட்களான வீட்டு பாவனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், தளபாடங்கள், மின்உபகர ணங்கள், ஊர்திகள்,மற்றும் கட்டட அமைப்புளுடனும், ஜவுளி மற்றும் விளையாட்டு உபகரணங்களுடனும் தொடர்புள்ளது. கைத்தொழில் வடிவமைப்பு பொதி செய்தல், பெட்டியிலடைத்தல் மற்றும் கவர்ச்சியுடனும் தொர்புடையது.

பொது நியதியாக ஒரு கைத்தொழில் வடிவமைப்பானது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

- முப்பரிமாண அம்சம் உதாரணம் அதன் வடிவம்.
- இருபரிமாண அம்சம் உதாரணம் அதன் அலங்கார வேலைப்பாடு, கோடுகள் அல்லது வர்ணம்,
- மேலே கூறப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

முப்பரிமாண வடிவமைப்பிற்கு உதாரணம்



Courtesy: Villeroy + Boch A.G.

இருபரிமாண வடிவமைப்பிற்கான உதாரணம்



## வியாபாரத்தில் புத்தாக்க வடிவமைப்பு

வியாபார தாபனங்கள் அதிக நேரத்தை யும் வளங்களையும் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் வடிவமைப்புக் கவர்ச்சிக்காக செலவிடுகின்றனர். புதிய அசல வடிவமைப்பக்கள் உருவாக்கம் பெறுவது:

1. **குறிப்பிட்ட சந்தைக்கு ஏற்ப தம் உற்பத்தியை உருவாக்க:** சில பொருட்களில் சிறிய வடிவமைப்பு மாற்றங்கள் செய்தல் (உ + ம்: மணிக்கூடு) மூலம் அதை குறிப்பிட்ட வயதெல்லையினருக்கு ஏற்றதாக மாற்றல். அதன் மூல செயல்பாடுக ளில் மாற்றமிராத போதும், குழந்தை களும் முதியவர்களும் வேறுபட்ட ரசனை யுள்ளவராயுள்ளனர்.

2. **தமக்கேயுரிய சந்தையை உருவாக்க:** தமது போட்டியாளருடைய பொருளிலி ருந்து தமது பொருளை வேறுபடுத்த தமக்கேயுரிய அசல் வடிவமைப்பை உருவாக்குவதன் மூலம் தமக்கென்ற ஒரு சநதையை உருவாக்கிக்கொள்ள முனைகின்றனர். இவ்வித கொள்கை சாதாரண பூட்டுக்கள், பாதணிகள், கோப்பை ஸாஸரிலிருந்து விலை கூடிய அலங்கார நகைகள், கணினி கள், கார்கள் போன்றவை இதிலடங்குகின்றன.

3. **வியாபார குறியிடுகளை ஸ்திரப் படுத்தல்:** புத்தாக்க வடிவமைப்பு உருவாக்கங்களின் போது தனிப்பட்ட குறியீடுகளுடன் தமது தாபனத்தின் குறியீடுகளையும் ஸ்திரப்படுத்துகின் றனர். அனேக தாபனங்கள் தமது வடிவமைப்பு உருவாக்கத்தின் மூலம் தத்தமது குறியீடுகளை வெற்றிகரமாக உருவாக்கி அல்லது மீள்நிர்ண யித்துள்ளனர்.

## ஏன் கைத்தொழில் வடிவமைப்பை பாதுகாக்கவேண்டும்?

கைத்தொழில் வடிவமைப்பானது உற்பத்திப் பொருளின் பெறுமதியைக் கூட்டுகின்றது. அது நுகர்வோனுக்கு அப் பொருள் கவர்சிகரமானதாகவும் விரும்பப் படத்தக்கதாகவும் இருப்பதோடு அது அப் பொருள் விலையாவதற்கான தனிப்பட்ட காரணியாகவும் ஆகலாம். எனவே பெறும தியான வடிவமைப்புகளை பாதுகாத்தல் ஒரு வடிவமைத்தரின் அல்லது உற்பத்தி யாளரின் தீர்க்கமான வியாபார யுத்தியாக விருக்கும்.

ஒரு கைத்தொழில் வடிவமைப்பை தேசிய அல்லது பிராந்திய அறிவுசார் சொத்துரிமை காரியாலயத்தில் பதிவு செய்துகொள்வதன் மூலம் அதன் உரிமையாளர் **அனுமதியற்றவர்கள் அதனை பிரதிசெய்தலை அல்லது போலிகளின் தயாரிப்பை தடுப்பதற்கான முழுமையான அதிகாரத்தை** பெறுகின்றார். இதற்கூடாக வியாபாரம் அர்த்தமுள்ளதாகவும் போட்டித் தனைமையை ஊக்குவிப்பதாயும் இருப்ப தோடு மேலதிக வருமானத்தை பின்வரும் முறைகளில் ஏற்ப்படுத்துகின்றது:



Courtesy: Victorinox Ltd

- வடிவமைப்பை பதிவுசெய்தல் மூலம் ஒரு போட்டியாளர் அப்பொருளின் போலித்தயாரித்தலை அல்லது பிரதிபடுத்தலை தடுப்பதால் போட்டியில் உங்களது நிலை உறுதியாகும்.

- பெறுமதிவாய்ந்த வடிவமைப்பு ஒன்றை பதிவுசெய்வதன் மூலம் சந்தைப்படுத்தலில் **முதலீட்டிற் கான நியாயமான மீளளித்தலைப்** பெற்று வருமானத்தைக் கூட்டலாம்.

- கைத்தொழில் வடிவமைப்பக்கள் ஒரு வியாபார தாபனத்தின் அல்லது உற்ப்பத்தியின் பெறுமதி யை கூட்டுவதனால்அவையும் **வியாபாரச் செத்துக்களாகும்.**

- பதிவுசெய்யப்பட்ட வடிவமைப் பொன்றை மற்றவர்களுக்கு ஒரு கட்டணத்திற்கு **அனுமதிக்கலாம்** (அல்லது விற்க்கலாம்). இவ்விதம் அனுமத்ப்பதன் மூலம் எம்மால் இதுவரைகாலம் செல்லமுடியாத சந்தைகளை எட்டக்கூடியதா யிருக்கும்.

- கைத்தொழில் வடிவமைப்பொன் றை பதிவுசெய்தலின் மூலம் நியாயமான போட்டித்தன்மையுடன் நீதியான வியாபார முறைகளும் ஊக்குவிக்கப் படுவதால் கவர்ச்சி கரமான பலவேறுபட்ட தொடர்பொ ருட்களின் உற்பத்தி ஊக்குவிக் கப் படுகின்றது.

## ஐரோப்பிய யூனியனில் வடிவமைப்புக்களை பாதுகாப்பதன் காரணங்கள்




*மூலம்: OHIM வடிவமைப்பு பற்றிய பதிவு தேவை சார்பாக 2002ல் நடாத்தப்பட்ட ஆய்வு*

## வடிவமைப்புகள் பற்றிய சில வெளிப்பாடுகள்

தொழிற்சார் அடிப்படையில் உற்பத்தி செய்ப்பட்ட எல்லா விளக்குகளிற்கும் வெறுபாடு இல்லாவிட்டாலும், அவற்றின் தோற்றம் சந்தையில் வெற்றியை நிர்ண யிக்கின்றது.இதனாலேயேஅனேக நாடுக ளில் வீட்டுப்பாவனைப் பொருட்களின் வடி வமைப்பானது கைத்தொழில் வடிவமைப்பு பதிபேடுகளில் நீண்ட பட்டியலாயிருக்க காண்கின்றோம்.



Courtesy: Nemo S.p.A.

## 2. கைத்தொழில் வடிவமைப்பை பாதுகாத்தல்

### உங்களுடைய கைத்தொழில் வடிவமைப் புக்களை எவ்விதத்தில் பாதுகாக்கலாம்?

அனேகமான நாடுகளில் கைத்தொழில் வடிவமைப்புச் சட்டத்தின் கீழ் **ஓர் கைத் தொழில் வடிவமைப்பானது பாதுகாப்பு பெறும்படிக்கு பதிவுசெய்யப்பட வேண்டும்.**

கைத்தொழில் வடிவமைப்பொன்றை பதிவுசெய்ய எந்நாட்டில் பதிவுசெய்ய வேண்டுமோ, **அந்நாட்டின் தேசிய அறிவு சார் சொத்து** (IP) அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஜபின்னி ணைப்பு - I ல் IP காரியாலயங்களின் இணையதளங்களை காண்கஸ வெளி நாடுகளில் பாதுகாப்பைப் பெற பகுதி 3 ஐ பார்க்குக.

சில நாடுகளில் அல்லது பொது பொரு ளாதார கூட்டமைப்பு பிரதேசங்களில் உ+ ம் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் பதிவுசெய்யப்படாத கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு வெளியிடப்பட்ட திததியிலிருந்து வரையறுக்கப்பட்ட பாதுகாப்பொன்றை மூன்று வருடகாலத் திற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதான சட்டவரைபு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதிக்கூடாக கைத்தொழில் வடிவமைப்பை மேற்கொண்ட தாபனம் அதனை காப்புறுதி செய்வதற்கான முயற்சிக்கும் பணசெலவீட்டிற்கும் முன்ன தாக தமது உற்பத்திப் பொருள்களிற் குள்ள சந்தை கேள்வியினை அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கின்றது. ஏனெனில் அனெகமானவை சந்தையில் வெற்றிபெறு வதில்லை. மேலும் நாகரீக ஆடையலங் காரம் போன்ற சில வடிவமைப்புகள் சந் தையில் குறுகிய காலகட்டத்திற்கே நிலைத்திருக்கின்றன.
இவ்வித உற்பத்திகளுக்கு பதியப்படா வடிவமைப்பு சட்டத்தின் கீழ் மாற்றீடுகள் பெறப்படலாம். ஒரு உற்பத்தியாளருக்கு ஒரு பொருளை உற்பத்தி செய்த நாளி லிருந்து 12 மாத காலத்திற்குள் அதனை பதிவுசெய்து கொள்ளலாம். ஓர் பதியப் படாத பொருளிற்கான பாதுகாப்பானது வரையறுக்கப்பட்டதாகும். அதேவேளை பாதுபாக்கப் பட்ட வடிவமைப் புகளுக்கு 25 வருட பாதுபாப்பு உள்ள வேளையில் பாதுகாக்கப்படாத பொருட்க ளின் பாதுகாப்பு குறுகிய மூன்று வருடங் களுக்கே செல்லுபடியாகும் என்பதுடன் பாதுகாப்பை நடைமுற்படுத்துவதும் கடினமாகும்.

பதியப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக் களையே இந்த வழிகாட்டி முன் நிறுத்துவ தனால் சில நாடுகளில் வடிவமைப்புக்களை பாதுபாப்பதற்கான வேறுவகையான பதிலீடு களும் இருக்கலாம் என்பதனையும் இங்கு முக்கியமாக எடுத்தியம்ப வேண்டும்.

- குறிப்பிட்ட தேசிய சட்டத்தையும் வடிவமைப்பையும் குறித்த பதிப்புரி மை சட்டம் (copyright law) இவ்வித பதிலீடுகளில் ஒன்றாகும். இச்சட்டத் தின் பிரகாரம் இலக்கிய மற்றும் கலைசார்பான பிரதிசெய்தலை தடுக் கும் பிரத்தியேக பாதுகாப்பு உரிமை யை பெறலாம். சிலவடிவமைப்புக் கள் சில நாடுகளில் கலைநுட்பமாக அல்லது பிரயோக கலையாக கருதி பிரதிசெய்தலை தடுக்கும் சட்டமானது நடைமுறைபடுத்துடுவதோடு சிறிய மற்றும் நடுத்தர தாபனங்களுக்கு (SME) ஏற்ற தெரிவுமாகலாம்.

- தற்கு மேலாக கைத்தொழில் வடி வமைப்பானது சிலநாடுகளில் வியா பார சின்னமாக தொழிற்படுவதால் அவை முப்பரிமாண குறி□டாகவும் பாதுகாக்கப்படலாம். இங்கு பொரு ளின் வடிவமைப்பும் பொதி செய்த முறையும் பிரத்தியோகமானதாக கருதப்படும்.

- சில நாடுகளில் முறையற்ற போட்டிக்கெதிரான சட்டங்கள் ஒரு தாபனத்தின் கைத்தொழில் வடிவமைப்பை பாதுகாக்கின்றது

உங்களது வடிவமைப்பை பதிப்பரிமை, வியாபாரச் சின்னம் அல்லது **முறையற்ற போட்டி** சட்டங்களுக்கூடாக பாதுகாக்க தேவையான மேலும் விபரங்களை பகுதி 5 ல் காண்க.

## கைத்தொழில் வடிவமைப்பு பாதுகாப்பிற் கூடாக எவ்வித உரிமைகள் கிட்டு கின்றன?

ஒரு கைத்தொழில் வடிவமைப்பை பதிவு செய்வதனூடாக, மூன்றாம் நபர் அவ்வடி வமைப்பின் **அனுமதியற்ற பிரதிசெய்த லை அல்லது நகல் எடுத்தலை உரிமை யாளருக்கு தடுக்கக் கூடியதாயிருக்கும்.** இதனூடாக மற்றைய எவரும் அவ் வடிவ மைப்போடு இணைந்த எந்த ஒரு பொரு ளையாவது செய்யவோ, கொடுக்கவோ, இறக்குமதி செய்யவோ ஏற்றுமதி செய் யவோ அல்லது விற்கவோ இச்சட்டம் தடுக்கும்உரிமையை உள்ளடக்கியுள்ளது. குறிப்பிட்ட நாட்டின் அல்லது பிராந்தியத் தின் சட்டமும் நடைமுறையும் பாதுகாப்பின் வியாபகத்தை நிர்ணயிக்கும்.

## எவற்றை கைத்தொழில் வடிவமைப்பாக பதியலாம்?

பொது நியதியாக ஒரு கைத்தொழில் வடிவமைப்பை பதிவதற்கு, நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய பின்வரும் ஒன்றை அல்லது அதற்கும் மேலான தேவைகளை அது கொண்டிருக்க வேண்டும்.

- வடிவமைப்பு புதியதாய் இருக்க வேண்டும். ஒரு வடிவமைப்பு பதிவுக் காக சமர்ப் பிக்கபடும் போது அதற் கு முன்னதாக அது அல்லது அதற் கொத்த வடிவமைப்பொன்று மக்கள் பாவனைக்காக சமர்பிக்கப்படாவிடத்து அது புதியது என கொள்ளப்படும்.

## பிரத்தியேக உரிமை

தங்கள் தாபனம் குடைக்கான புத்தாக்க வடிவமைப்பை உருவாக்கி தேசிய அறிவுசார் சொத்துரிமை [IP] காரியால யத்தில் பதிந்ததால் அவ்வடிவமைப்பிற் கான பிரத்தியேக உரிமையை பெற்றுக் கொள்ளும். இதன் அர்த்தம் என்னவென் றால் வியாபார போட்டியாளர் ஒருவர் அதையொத்த குடையை உருவாக்க, விற்க அல்லது இறக்குமதி செய்வதை கண்டுகொண்டால், அவ்வடிவமைப்பை பாவிப்பதை நீங்கள் தடைசெய்ய முடிவதுடன் அவ்வித அனுமதியற்ற பாவிப்பினால் ஏற்பட்ட நட்ட ஈட்டையும் பெற்றுக்கொள்ள இயலும். அதாவது போட்டியாளர்கள் போட்டிப் பொருட்களை உற்பத்தி செய்தலை தடுக கவியலா விட்டாலும் உங்களதைப்போன்ற உருவில் ஒரு பொருளை உருவாக்குதலை யும் உங்கள் புத்தாக்கத்தை இலவசமாக பாவிப்பதையும் தடுக்கலாம். எவ்விதம் உங் களது உரிமைகளை பாதுகாக்கலாம் என்ப தை மேலும் அறிந்து கொள்ள உங்கள் ஜீ சட்டதரணியின் அறிவுரையை நாடுங்கள்.



happy rain®

- வடிவமைப்பு **அசலானதாக** [original] இருக்கவேண்டும். அசலென்னும் போது வடிவமைப்பாளரினால் சுய மாக உருவாக்கப் பட்டதாயும் சந்தையிலுள்ள வேறு பொருட்க ளின் பிரதியாக இருக்கவும் கூடாது.

- வடிவமைப்பு தன்னகத்தே **தனிப் பட்ட குணாதிசயம்** கொண்டிருக்க வேண்டும். அறிவுள்ள ஒருபாவ னையாளர் உங்கள் வடிவமைப் பில் இதற்கு முன்னுள்ள வடிவ மைப்புகளில் பெற்ற எண்ணத்தை விட மாறுபட்ட அபிப்பிராயம் கொள் வாராயின் இக் குணாதிசயத்தை எய்தியதாக கருதலாம்.

வழக்கத்தில், பாதுகாப்பிற்கான வடிவ மைப்பு என்பது உற்பத்திசெய்யப்பட்ட காலணி மற்றும் காதணி அலங்கார தேனீர் கோப்பை போன்றவற்றின் வடி வமைப்புடன் தொடர்புபட்டது. தற்போ தைய டிஜிடல் உலகில் இப் பாதுகாப்பு மேலும் பல பொருட்களுக்கு சில நாடு களில் விஸ்தரிக்கப்படுள்ளது. கொம்பி யூட்டர் குறியீடு மூலம், இரத்திரானியல் டெஸ்க் டொப் ஐகொண்கள், அச்சு வடிவுகள் ஜகழவெளஸஇ கிரவிக் குறியீடுகள் கூட இப்பொது உள்ளடக்கப் பட்டுள்ளன.

## கைத்தொழில் வடிவமைப்பில் பாதுகாக்க முடியாதவை எவை?

அனேக நாடுகளில் பின்வரும் வடிவமைப் புக்கள் பதிவுசெய்தலிலிருந்து விலக்கப் பட்டுள்ளன:

- புதுமை, அசல் அல்லது தனித்துவம் என்ற (மேலே கூறியது போல) தேவையை சந்திக்காத வடிவமைப் புக்கள்.

- உற்பத்திப் பொருளின் பிரத்தியேக தொழில் நுணுக்க செயல்பாட்டை குறிக்கும் வடிவமைப்புக்கள். அவற் றின் தொழில்பாடு அல்லது செயற்பா டு வடிவமைப்புக்கள் அவை ஒவ் வொன்றினதும் இயல்பைப் பொறுத்து மற்றைய IP உரிமைகளுக்கூடாக பதிவு செய்யப்படலாம். (உ+ம். பொருளை தயாரிக்க, விற்கவுள்ள தனிப்பட்ட காப்புரிமை, உபயோகப் பொருட்கள் அல்லது வியாபார இரகசியங்கள் போன்றவை)

- அலுவலக அல்லது தேசிய சின்னங் களை ஒன்றித்தவை (உ+ம். தேசியக் கொடி போன்றவை)

- பொது நடத்தை அல்லது ஒழுக்க நெறிகளுக்கெதிராவை எனக் கருதப் படும் வடிவமைப்புக்கள்.

அத்துடன், சில நாடுகள் கைவினைப் பொருட்களை வடிவமைப்பு பாதுகாப்பி லிருந்து விலக்கியுள்ளன என்பதனை முக்கிய கவனத்தில் எடுக்க வேண்டும். இந் நாடுகளில் கைத்தொழில் வடிவமைப் பானது உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பொருள் அல்லது மீண்டும் பல பிரதிகள் தொழில் நுட்பத்தின் மூலம் எடுக்கக்கூடிய பொருட்களையே கைத்தொழில் வடிவமைப் புச் சட்டம் பதிவதற்கு இந்நாடுகள் இடமளித்துள்ளன.

தேசிய சட்டங்களின் பிரகாரம் மேலும் சில வடிவமைப்புக்கள் பதிவு செய்ய முடியாத வையாகலாம் எனவே ஒரு IP முகவரை அல்லது தேசிய IP காரியாலயத்தின் ஆலோசனையை பெறுவது உகந்ததாகும்.

## ஒரு வடிவமைப்பை பதிவு செய்வது எவ்வாறு?

உங்களது சொந்த நாட்டில் பதிவுசெய்வ தற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

- உங்களது தேசிய IP காரியாலத்தி-லுள்ள முறையான **விண்ணப்ப படிவத்தை** உங்கள் பெயருடனும், கைத்தொழில் வடிவமைப்பின் வரை **படங்களுடனும் அல்லது புகைப்படங் களுடனும்** பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்கென பொதுவான விண்ணப்ப படிவங்கள் உள்ளன (பின்னிணைப்பு I ல் IP இணைய தளங்களின் அட்டவணையை காண்க)

- சில நாடுகளில் கைத்தொழில் வடிவ மைப்பு(க்கள்) **பற்றிய புத்தாக்கத்தை எழுத்து மூல விபரம்** கேட்கப்படவோ சேர்த்துக் கொள்ளப்படவோ இடமளிக் கப்பட்டுள்ளது. இவ்விபரம் பொருளின் தன்மையைப் பற்றியதாயிராமல் அதன் வடிவமைப்பை பற்றியதா யிருக்க வேண்டும். பழைய வடிவ மைப்புக்களில் இருந்து எவ்விதம் உங்கள் வடிவமைப்பு வேறுபடுகின் றது எனக் காட்ட வேண்டும். புதிய வடிவமைப்பின் எல்லா கலையம்சங் களையும் காட்டுவதோடு எவ்வெவ் அம்சங்கள் முக்கியமானவை என்ப தையும் காட்ட வேண்டும். சில பரி சோதகர்கள் வடிவமைப்பின் தன்மை யை சரிவர புரிந்து கொள்வதற்கு ஒரு பிரதியை கோரலாம்.

- கோவைப்படுத்தலுக்காளன கட்டணம் செலுத்தும்படி கேட்கப்படுவீர்கள்.

- விண்ணப்பங்களை சீராக கோவைப் படுத்துவதற்காக ஒரு IP முகவரின் சேவையை பெற எத்தனித்தால் **அம் முகவருக்கு உங்கள் அதிகாரத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும்.**

நிர்வாக நடைமுறைகள் யாவும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டனவா என்பதை உறுதி படுத்திய பின்னரே அவ்வடிவமைப்பை பதிவு செய்வர். மேலும் சில காலரியால யங்கள் தம்மிடமுள்ள எல்லா வடிவமைப் புக்களையும் பரிசீலித்து புத்தாக்கத்தை உறுதி செய்த பின்னரே பதிவுசெய்கின்றன. பல காரியாலயங்கள் எவ்வித உறுதியும் மேற்கொள்ளாது பதிகின்றன.

ஒரு வடிவமைப்பு பதிவுசெய்யப்பட்டவுடன் பதிவேட்டில் செய்யப்பட்டு உத்தியோகபூர்வ கசட்வெளியீட்டில் வெளியிடப்படுகின்றது. மேலும் சில நாடுகளில்∴ பிராந்தியங்களில் சட்டப்படி வடிவமைப்பை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதியப்படாது ஒத்திவைக்க அதிகாரம் உள்ள படியால் அக்கால எல்லைவரை வடிவமைப்பின் இரகசியம் பேணப்படும். இவ்விதம் வடிவமைப்பின் இரகசியம் பேணப்படுவது.ஒரு வியாபார தந்திரமா கலாம்.

பிறநாடுகளில் எவ்விதம் வடிவமைப்பை பாதுகாக்கலாம் என்பதை பகுதி 3 இல் காண்க.

## ஒரு வடிவமைப்பை பதிய எவ்வளவு காலமாகும்?

ஒவ்வொரு தேசிய IP காரியாலயத்தில் அந்நாடுகளிலுள்ள சட்டங்களின் படி ஒரு கைத்தொழில் வடிவமைப்பை பதிவுசெய் வதற்கு 6 முதல் 12 மாதங்களோ அதற் கு கூடுதலாகவோ, பரீட்சகர் எடுக்கும் யாதேனும் ஆட்சேபனைகள் அல்லது சட்டப்படி வடிவமைப்பை பதிவதற்கு தெரிவிக்கக் கூடிய எதிர்ப்புகள் போன்ற வழிமுறைகளினால் கால தாமதம் ஏற்படலாம்.

## கைத்தொழில் வடிவமைப்பை பதிவுசெய் வ தற் கு முன் இ ரகசியமாக பாதுகாத் த ல் அ வசிய ம ா?

உங்கள் வடிவமைப்பு பதிவுசெய்வது வடிவமைப்பின் பாதுகாப்பிற்காக என்ப தால் பதிவுகள் நிறைவேறு மட்டும் அத னை இரகசியமாக பாதுகாக்க வேண்டும். இரகசியம் பேணுவதற்கான எழுத்து மூல உறுதியொன்றை பெற்ற பின்னரே வேறு யாருக்காகிலும் வடிவமைப்பை காட்ட வேண்டும்

வியாபார தாபனத்தின் பட்டியலில் (Catalogue) பிரசித்தப்படுத்தப்பட்ட அல்லது சிறு கையேடுகளில் (Brochure) வடிவமைப்பு பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அது புதியது என்ற தன்மையை இழந்து விடும். அவ்விதம் வெளியிடப்பட்ட வடிவ மைப்பானது விசேட கருணை இடைவெளி சட்டமில்லா நாடுகளில் பொதுவுடமையாவ தால் இதைப்போன்று இதற்கு முன்னர் நடந்த ஓர் தடயத்தை எடுத்துக் காட்டினா லொழிய அதனை சட்டப்படி பாதுகாக்க இயலாது. (வெளி நாடுகளில் வடிவமைப் பை எவ்விதம் பாதுகாக்கலாம் என்பதை பக்கம் 16 ல் காண்க)

**உதாரணம்:** குழந்தையும் பிள்ளையும் (BABY AND CHILDEN) குழந்தைகளின் ஸ்நானத்தொட்டிலில் குழந்தைகளின் சௌகரியத்தை கருத்தில் கொண்டு பிரெஞ்சு Baby and Children நிருவனம் குழந்தைகள் ஸ்நானம் செய்வதற்கென்று ஒரு சௌகரியமான எளிமையான குளி யல் தொட்டில் ஒன்றை உருவாக்கியது. இவ்வடிவமைப்பு உலகெங்குமுள்ள தாய் மாரையும் குழந்தைகளையும் கவர்ந்துள் ளது. தமது வடிவமைப்பை உலகெங்கும் பதிவதற்காக அந்நிறுவனம் 2000ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சர்வதேச விண்ணப் பத்தை கையளித்தது. தனது வியாபாரச் சின்னத்தை பதிவு செய்ததின் பின் மூன்று கண்டங்களிலுள்ள 10 நாடுகளில் தனது பொருளை விற்பனைக்கு நேரடி யாகவோ அல்லது மற்றவர்களுக்கு தமது வடிவமைப்பின் லைசன்சை வழங்கியோ விற்பனைக்கு விட்டது. இந்நிறுவனத்தின் வியாபார வெற்றி கணிசமானதாகும். இன்று Baby and Children தாபனத்தின் மிக முக்கிய வியாபார பாண்டமாக இக் குளியல் தொட்டில் இருப்பதோடு தமது தனிப்பட்ட வியாபார பாதுகாப்பின் மூலம் இன்று உலகெங்கும் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்துகின்றது.



Courtesy: குழந்தையும் பிள்ளையும்

## கருணைகாலம் என்றால் என்ன ?

சிலநாடுகளில் ஒரு கைத்தொழில் வடிவமைப்பு அந்நாடுகளின் சட்டப்படி அவ்வடிவமைப்பு பதிவதற்கும் அதனை சந்தையில் பகிரங்கப் படுத்துவதற்கும் அல்லது வெளியிடுவதற்கும் இடையில் 6 முதல் 12 மாதங்கள் வரையான கருணை காலத்தை வழங்குகின்றன.

இதனால் முறைப்படி வடிவமைப்பின் கோவையை பதியுமுன் அவ்வடிவமைப் பினைக் கொண்ட பொருள் ஒன்றை விற்பனைக்குவிட்டோ, கண்காட்சியில் அல்லது வியாபார தொடர்பு காட்சியில் வைத்தோ, வியாபார பட்டியலில் (catalogue) அல்லது சிறு விளம்பர வெளியீடுகளில் (brochure) வெளியிட் டதனால் தனது புத்தாக்க தன்மையினை இழக்காது பாதுகாத்து பதிவினை ஏற்படுத்தலாம்.

எனினும் எல்லா நாடுகளிலும் இந்நிலைபாடு இல்லாத படியினாலும் தரப்படும் கருணைக்காலம் குறுகியதாலும் வடிவமைப்பின் பாதுகாப் பிற்காக அதனை பதியுமட்டும் இரகசிய மாக பாதுகாத்தல் மிக முக்கிய விடயமாகும். உங்கள் நாட்டிலுள்ள பதிப்புரிமை (copyright) சட்டம், மற்றும் நீதியற்ற போட்டி சட்ட திட்டங் களின் படி உங்கள் வடிவமைப்பு பாதுகாக்கப்பட்டாலும் அவ் வடிவமைப் பிற்கான பிரத்தியேக உரிமையை பெற்றிருக்க மாட்டீர்கள். (பகுதி 5 ல் மேலும் பதிப்புரிமை சட்டம் பற்றி காண்க)

## கைத்தொழில் பாதுகாப்பு எவ்வளவு காலத்திற்கு வலுப் பெற்றது?

கைத்தொழில் வடிவமைப்பு பாதுகாப்பு நாட்டிற்கு நாடு வேறுபடும். **சாதாரணமாக 10 வருடங்க ளுக்கு** இது பாதுகாப்பளிக்கின்றது. (ஆயினும் ஐக்கிய அமெரிக்க இராஜியத் தில் 14 வருடங்களும் ஐரோப்பிய யுனியன் நாடுகளில் 25 வருடங்களாகவும் இருக்கின்றது). அனேகமான நாடுகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தத் தமது வடிவமைப்புக்களை பதிவேடுகளில் புதுப்பிக்க கோருகின்றன.

## கைத்தொழில் வடிவமைப்பை பதிய எவ்வளவு செலவாகும் ?

இச்செலவு நாட்டிற்கு நாடு வித்தியாசப் படும். அதேவேளை வெவ்வேறு விதமான செலவுகன் ஏற்படலாம் என்பதனையும் மனதில் கொள்க:

1. தேசிய.: பிராந்திய IP காரியாலயத்தில் பதிவுக்கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டும். பதிவு கட்டணமானது பதிய வேண்டிய வடிவமைப்புக்களின் தொகை யிலும் பதிய வேண்டிய நாடுகளின் எண்ணிக்கையுடனும் நேரிடையாக தொடர்புள்ளது. உதாரணத்திற்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளில் தனிப்பட்ட வடிவமைப்பை பதிதற்கு 350 யூரோக்கள் செலவாகும் அதுவே 10 வடிவமைப்புக்களைக் கொண்டதெனில் 1,925 யூரோக்கள் வரை ஆகலாம். இதற்கு ஏற்படும் சரியான செலவுகளை அறிய உங்கள் IP முகவரிடம் இருந்தோ அல்லது உங்கள் அருகாமையிலுள்ள IP காரியாலயத்தில் இருந்தோ அறிந்து கொள்ளலாம்.

2. அதேவேளை இப் பதிவு வேலையில் நீங்கள் உங்களுக்குக் உதவ அனுப வம் உள்ள IP முகவரை வேலைக் கமர்த்தும் கட்டணமும் இங்கு கணக் கில் எடுக்க வேண்டும்.

3. அனேக நாடுகள் ஐந்து வருடங்களுக் கொரு முறை தமதுகைத்தொழில் வடிவமைப்பை புதுப்பிக்கும் கட்டணத்தை பெற்று தாபனங்களுக்கு தமது வடிவமைப்பின் பிரத்தியேக உரிமையை வழங்குகின்றன.

4. வெளிநாடொன்றில் பதிவுசெய்வதற்கு ஏற்படும் மொழி பெயர்ப்பு கட்டணமும் கிரயத்துடன் சேர்க்கப்படும்.

## வடிவமைப்பு கலைதிறனோடு செயல் திறன் மேம்பாடும் கொண்டிருப்பின் என்ன செய்ய வேண்டும்?

ஒரு பொருளின் செயல்திறன் மேம்பட்டிருப்பின் அதற்கான பிரத்தியேக பாதுகாப்பிற்கு ஆக்க உரிமைப் பத்திரம் (patent) அல்லது பயன்பாட்டு மொடல் பாதுகாப்புக்கு விண்ணப்பிப்பதுடன் அதன் தொழில் பாடு வெளிப்படையா யில்லாவிடத்து அதை வியாபார இரகசியமாக பேண விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு புதுப்பொருளின் உற்பத்தியா னது தொழில் பாட்டு மேம்பாட்டுடன் கலைத்தினும் கலந்துதான் காணப்படும். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு புதிய செல் லிட தொலைபேசியை வடிவமைத்து உள் ளீர்கள் என வைத்துக் கொள்வோம். உங் கள் தொலைபேசி பலதரப்பட்ட பகுதிக ளில் இலத்திரானியல் முன்னேற்றங்களை கொண்டும் இருப்பதனால் அதை ஆக்க உரிமை (pattern) மூலம் பாதுகாக்கவிய லும். உங்கள் தொலைபேசியின் ஒரிஜினல் வடிவமைப்பு கைத்தொழில் வடிவமைப்பில் பதிவுசெய்யப்படலாம். இரண்டிற்கும் ஒரே நேரத்தில் நாம் விண்ணப்பிக்க இயலும்.



' Nokia

## வடிவமைப்பு பாதுகாப்பும் வியாபார தந்திரோபாயமும்

ஒரு வியாபார தாபனத்தின் கைத்தொழில் வடிவமைப்புகள் எவ்விதம், எப்போது, எங்கே பாதுகாக்கப்படவேண்டும் என்ற தீர்மானங்கள் வடிவமைப்பு முகாமைத்து வத்தில் முக்கிய தாக்கங்களை ஏற்படுத் தலாம். எனவே ஒரு பரந்துபட்ட வியாபார தந்திரோபாயத்தில் வடிவமைப்பு பாது காப்பு பற்றிய அம்சங்கள் உள்ளடக் குதல் அவசியம். உதாரணத்திற்கு வடிவமைப்பு பாதுகாப்பு வகை அதன் கிரயம், வடிவமைப்பின் உரிமை, பாதுகாப்பின் வினைத்திறன் என்பன பின்வரும் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு முக்கிய காரணிகளாக அமையலாம்.

- வடிவமைப்பை முன்னேற்றுவதற்கு தாபனத்தினுள் உள்ள அல்லது வெளியிலிருந்து ஒரு முகவரை நியமித்தல்.
- புதிய வடிவமைப்பு பற்றிய முதல் விளம்பரம், சந்தைப்படுத்தல், கண் காட்சியில் காட்சிப்படுத்தல் போன்ற வற்றை உரிய காலத்தில் செய்தல்.
- எவ்வெவ் ஏற்றுமதி சந்தைகளை இலக்குப் படுத்துகின்றோம்.
- பொருளாதார அனுகூலங்களைப் பெறும் நோக்கில் அனுமதிப்பத்திரம் வழங்கு தல் மற்றும் வடிவமைப்பு ஒன்றை வர்த்தக ரீதியில் பயன்படுத்த மற்ற நிறுவனங்களை எப்போது எப்படி அனுமதிப்பது.

www.wipo.int/sme/

அனேக உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியின் பல பகுதிகளை வெவ் வேறு அறிவுசார் சொத்ததிகாரத்தின் கீழ் பாதுகாக்கின்றனர். எனினும் ஆக்க உரிமைக்கும் ∴ பயன்பாட்டு மாதிரியுருவிற்கும் கைத்தொழில் வடிவமைப்பிற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை மனதில் கொள்ள வேண்டும். ஆக்கஉரிமைப்பத்திரம் ∴பயன்பாடு மாதிரியுருபத்திரம் உற்பத்திப்பொருளில் கண்டுபிடிக்கப் பட்ட செயல்பாட்டு முன்னேற்றத்திற்கும் கைத்தொழில் வடிவமைப்பு பாதுகாப்பா னது அப்பொருளின் உருத்தோற்றத்திற் கும் பாதுகாப்பளிக்கும்.

## கைத்தொழில் வடிவமைப்பு பாதுகாப்பிற்கு யார் விண்ணப்பிக்கலாம ?

பொதுவாக வடிவமைப்பை உருவாக்கிய வர் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்பவரானால் அவரது பணி கொள்வோர் விண்ணப்பிக்கலாம்.விண்ணப்பத்தாரி தனிநபராகவோ (உ+ம் வடிவமைப்பாளர்) சட்டபூர்வமாக தாபிக்கப் பட்ட நிலையமாகவோ (உ+ம் வியாபார தாபனம்) இருக்கலாம். விண்ணப்பத்தாரி நேராக அல்லது ஒருமுகவரூடாக விண்ணப் பிக்கலாம். விண்ணப்ப்தாரி வெளிநாட்டின ரானால் முறைப்படி அனுமதிக்கப்பட்ட முகவரூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

## கைத்தொழில் வடிவமைப்பின் மேல் அதிகாரமுள்ளவர் யார்?

விசேட சந்தர்ப்பங்களைத் தவிர வடிமைப் பாளரே வடிவமைப்பின் முதல் உரிமையா ளராவர். உதாரணத்திற்கு அனேக நாடுக ளில் வேலை ஒப்பந்தத்தின் கீழ் ஊழியர் ஒருவர் வடிவமைளபை தனது வேலை நேரத்தில் தாபனத்திற்குள் வேலையின் ஒரு பகுதியாக உருவாக்கியிருந்தால் வடிவமைப்பும் அதன் உரிமையும் வேலை கொள்வோருக்கே சொந்தமாகும். அல்லது

ஒரு முறையான கடிதத்தின் மூலம்

உதாரணம்: DURACELL

1980கள் வரை னுருசுயுஊநுடு தாபனம் அல்கலைன் மின்கலங்களை மட்டுமே உற்பத்தி செய்தது. அக்காலத்தில் இத் தாபனம் வடிவமைப்பு நிபுணர் ஒருவரை பொக்கெட்டில் எடுத்து செல்லக்கூடிய டோச்லைட் ஒன்றை வடிவமைக்க நியமித்து 1982ல் அதை சந்தைப்படுத்தி யது. இரண்டு வருடங்களின் பின்னர் வடி வமைப்பாளர் ஐக்கிய இராஜியத்தின் வடிவமைப்பாளர் சபையின் வெகுமதி யினை வென்றார். கடந்த கால இடை வெளியில் ஒவ்வொரு சந்தைக்கேற்ற வேறுபட்ட டோச்லைட்களை பல்வேறு மாற்றங்களுடன் இத்தாபனம் சந்தைப் படுத்தியுள்ளது. வாலிப வாடிக்கையாள ருக்காக பல்வேறு வர்ணங்களிலும் கூட இவற்றை சந்தைப்படுத்தியது.

இதன் உள்ளார்ந்த செயர்பாடுகளை ஆக்க உரிமை பாதுகாப்பிற்கூடாகவும் அதன் வடிவமைப்பை தான் விற்பளை செய்யும் சகல நாடுகளிலும் பதிவுசெய்து பாகாப்பை பெற்றுள்ளது.




Duracell fi

கைமாற்றப்படலாம்.

**ஓப்பந்த அடிப்படையில் வெளியார் ஒருவரினால்** வடிவமைப்பு உருவாக்கப் பட்டிருந்தால் அவ்வடிவமைப்பு அவரை நியமித்த தாபனத்திற்கே சாதாரணமாக செந்தமாகும். இப்படிப்பட்ட நிலையில் யார் வடிவமைப்பை அமைக்கும்படி நியமித்தாரோ அவருக்கே அது உரிமை யாகும். உண்மையான வடிவமைப்பாள ரோடு ஏற்படக்கூடிய ஏதேனும் பிரச்சனை கள் முதலில் ஏற்படுத்திய ஓப்பந்த நியமங்களை திரும்ப பார்ப்பதன் மூலம் தவிர்க்கலாம்.

வடிவமைப்பாளருக்கு தனது வடிவமைப்பிற்கான பிரதிசெய்தலை தடுக்கும் அதிகாரம் தானாகவே கிடைப்பதனால் இதை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## பல வடிவமைப்புக்களை தனி ஒரு விண்ணப்பப் படிவத்தின்மூலம் பதியலாமா?

இதற்கான விடை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. ஒரே உற்பத்தியை அல்லது வகையை சேர்ந்த பொருட்களா னால் 10, 20 அல்லது அதற்கு மேற்பட்ட 50 வடிவமைப்புக்கள் கூட ஒரே விண்ணப் பத்தில் பதிவிற்காக விண்ணப்பிக்கலாம். (15ம் பக்கத்தில் ஒரே வகை பொருட்களின் அட்டவணைனை பார்க்க)

### உதாரணம் TRAX

OMK Designs தாபனத்தால் சந்தைப்படுத் தப்படும் TRAX பொது இருக்கைகளுக் கான வடிவமைப்பு ரொட்ணி கின்ஸ்மன் (Rodney Kinsman) என்பவரால் வடிவமைக் கப் பட்டுள்ளது. பிரித்தானிய புகையிரத சேவை பொதுஜனங்கள் சௌகரியமாக பயணிக்கவும் எடுப்பான தோற்றத்தையும் கால நிலைகளுக்கு ஈடுபிடிக்கக் கூடிய தும் குறைந்த பராமரிப்புள்ளதுமான இருக்கைகளை தேடியது. இக்கால நீரோட்டத்தில் TRAX வெற்றிகரமான வடிவமைப்புக்களை வெளிப்படுத்தியது. இக்கால கட்டத்தில் 60 விமான நிலையங்களில் TRAX வடிவமைப்புக் கள் தம் இடத்தை வெற்றிகரமான வடிவமைப்புக்கள் மூலம் பிடித்துள்ளன.
TRAX தனது வடிவமைப்புக்களை கைத்தொழில் வடிவமைப்பின் மூலம் ஐக்கிய இராஜியம், அவுஸ்திரேலியா, பெனலக்ஸ் நாடுகள், ஜெர்மினி, இத்தாலி, யப்பான், மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் பாதுகாக்கின்றது.

எனவே OMK தாபனத்திற்கு சந்தைபடுத்தலுக்கான முழுமையான தனிஉரிமையை இந்நாடுகளில் பெற்றுக் கொண்டது. அதேவேளை இத்தாபனம் சில வெளிநாட்டு தாபனற்களுக்கு TRAX இருக்கைகளை உற்பத்தி செய்யவும் விற்பனை செய்யவும் ஆக்க உரிமை கட்டணத்தை பெற்று உற்பத்தி செய்ய அனுமதியளித்துள்ளது.



Courtesy: TRAXfi

w w w . w i p o . i n t / s m e /

நீங்கள் வடிவமைத்து அவற்றை பாதுகாக்க விரும்பின் அனேக நாடுகளில் அவை ஒரே வகை யினை சேர்ந்தபடியால் ஒரு கட்டணத்தில் ஒரே விண்ணப்ப படிவத்தின் மூலம் பதி யலாம். அதேவேளை அதனுடனிணைக் கப்பட்டுள்ள ஒரு விளக்கையும் பதிய வேண்டுமானால் வெவ்வேறான விண்ணப் பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எப்படியாகிலும் விளக்குகள் ஒரே வகை யினை சேர்ந்தவையாக கணக்கிடப்படு வதில்லை. பொதுவாக ஒவ்வொரு வடி வமைப்பிற்கும் வெவ்வேறாக கட்டணம் அறவிட்டாலும் அவை தனித்தனியான விண்ணப்பத்திற்கு செலவிடும் தொகையி லும் மிகக் குறைவே.

